1981 ஆகஸ்ட் 29]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வாழையிலே எத்தனை வகை இருக்கின்றது? அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்குப் பயன் தரக்கூடியது எந்த வகை? அதிலே, சோகை, வாடை நோய் சில வாழைகளைத் தாக்குகிறது. அதை நிவர்த்தி செய்ய ஏதாவது ஆராய்ச்சி செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது விரிஞ்சிபுரம் பண்ணையைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால், விவரமாகப் பதில் சொல்லலாம்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழை ஆராய்ச்சி விரிஞ்சிபுரம் அல்லாமல் வேறு ஏதாவது இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் விரிஞ்சிபுரம் வாழைப் பண்ணை எப்பொழுது துவங்கப்பட்டது? எவ்வளவு ஏக்கர் பரப்பளவிலே பயிர் செய்யப்படுகிறது? எவ்வளவு வாழை உற்பத்தியாகிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஏக்கர் பரப்பளவிலே இது துவங்கப்பட்டது. டிசம்பர் மாதம் முதல் இந்தப் பண்ணை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டு, வாழை சம்பந்தமான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள விதைகள் தட்டுப்பாடு.

*வினா எண் 129—திரு. எம். எஸ். மாணிக்கம், திரு. த. வீராசாமி, திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டதின் காரணமாக வேர்க்கடலை போன்ற விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விநியோகிக்க நிலக்கடலை மற்றும் நெல் கொள்முதலுக்காக அரசு முதலில் ரூ. 62 இலட்சமும், பிறகு ரூ. 50 இலட்சமும் செலவு செய்ய அனுமதி அளித்துள்ளது.

இதைத் தவிர மொத்தத்தில் வறட்சிப் பணிகளுக்காக ரூ. 380 இலட்சம் செலவிட அரசு உத்தேசித்துள்ளது. இந்த பணம் மானிய விலையில் விதைகள் மற்றும் பூச்சிக் கொல்லி உரம் முதலியவைகளை வறட்சிப் பகுதிகளில் விவசாயிகளுக்கு விற்பனைச் செய்ய பயன்படுத்தப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி ஏற்பட்டதின் காரணமாக நல்ல பலன் அளிக்கக்கூடிய வீரிய விதைகள் கிடைக்காமல் பல இடங்களிலே விவசாயிகள் மிகவும் அல்லல்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது குறிப்பாக, நல்ல பலன் அளிக்கக்கூடிய கோயில்பட்டியில் நெட்டச்சோளம் மானாவாரியிலே பயிரிடப்படுவது அங்கே உள்ள விவசாயிகள் எல்லா டெப்போக்களிலும் கேட்டும் ஓரிடத்திலும் கிடைக்க வில்லை என்று சொல்லப்படுகிறதே, ஆகவே அதை வரவழைத்து அந்தக் கோயில்பட்டி வட்டாரத்தில் நெட்டைச்சோளம் விதைக்கு கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9.30]

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் கொடுக்கப் படுகின்றன. ஆனால் மார்ஜினல் விவசாயிகளைத் தாண்டியவர் களுக்கு சாதாரண விதைகள் கிடைக்காமல் நேஷனல் சீட் கார்ப்பரேஷனிலிருந்து அதிக விலை வாங்கியிருக்கிறார்கள். ஆகவே இடைப்பட்ட குறைந்த விலையில் அவர்களுக்குக் கொடுக்க அரசு வகை செய்யுமா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்குத்தான் இந்த மானிய விலையில் கொடுக்கிறோம். மற்ற ஏற்பாட்டை செய்வது கடினம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த சீரிய விதைகள் வெளி மாநிலங்களில் இருந்து வருகின்றன. சில சமயங்களில் அவைகள் தனியார்களிடம் போய் சேர்ந்து விடுகின்றன. விவசாயிகள் அங்கே போய் வாங்கவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை இருக்கின்றது. கோவில்பட்டி போன்ற இடங்களிலே இந்த நிலை உள்ளது. இதை உடனடியாக அரசு கவனித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நம்முடைய துறையைப் பொருத்தவரையில் நாமே நேரடியாக கொள்முதல் செய்து, விதைகளை வரவழைத்து தேசிய விற்பனைக் கழகம் போன்றவைகளிலே நாமே நிலக்கடலை போன்ற விதை களை வாங்கி மானிய விலையில் தந்து கொண்டிருக்கிறோம்.

1981 ஆகஸ்ட் 29]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு விவசாயிகளுக்கும் மிகச் சிறிய விவசாயிகளுக்கும் மானிய விலையில் விதைகள் வழங்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போல பெரிய விவசாயிகளுக்கும் தேவைப்படுகின்ற விதைகள், மானிய விலையில் இல்லாவிட்டாலும், முழு விலையில் வழங்க அரசு முன்வருமா? மாவட்ட ரீதியாக எவ்வளவு விதைகள் இப்படி மலிவு விலையில் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கும் குறு விவசாயிகளுக்கும் தந்ததுபோக அதிகம் இருந்தால் இப்படிப்பட்ட விதைகளை தர இயலும். மாவட்ட வாரியாக விவரம் தற்போது இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதிகளிலே விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு சில உதவி செய்கிற வகையில் மணிலா விதைகள் போன்ற விதைகளை மானிய விலையில் அளிக்கும் உத்தரவை அரசு தக்க தருணத்திலே உத்தரவிடாத காரணத்தினால், அந்தக் காலதாமதத்தாலே உத்தரவு கிடைக்காத காரணத்தினாலே ஆரம்பத்திலே முழு விலை கொடுத்து விவசாயி வாங்கியவர்களுக்கு பிறகு அந்த மானியம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதுபற்றி இதுவரையில் எந்தப் புகாரும் அரசுக்கு வரவில்லை. விவரம் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிள்ளையார் நத்தம் கிராமம் அருகே பழப்பண்ணை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 130—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி பிள்ளையார்நத்தம் கிராமம் அருகே 100 ஏக்கரில் மேற்குத் தொடர்ச்சி மலை முன்னேற்ற திட்டத்தின் கீழ் மாபெரும் பழப்பண்ணை ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திருவில்லிபுத்தூர் தாலுக்கா மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவில்லை. எனினும் திருவில்லிப்புத்தூர் தாலுக்காவிலுள்ள வெங்கடேசபுரம் என்னும் கிராமத்தில் 20 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் பழப்பண்ணை மற்றும் நாற்றங்கால் நிறுவும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றியதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்